பக்கங்கள் 13+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 10 திங்கட்கிழமை 25.11.2024 | அதிர்வு 116

## வெள்ளத்தில் மூழ்கிய வட்டுவாகல் பாலம்!



விரிவான செய்தி 5 ஆம் பக்கத்தில்

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# நினைவேந்தல் நிகழ்வை தடுத்து நிறுத்த முடியாது!



## புலிகளின் இலட்சினை, படங்களைப் பயன்படுத்தாதீர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அறிவுறுத்து

“வடக்காகஇருந்தாலும்,கிழக்காக இருந்தாலும், தெற்காக இருந்தாலும், மலையகமாக இருந்தாலும் உயிரிழுந்த தமது உறவுகளை நினைவுகூருவதற்குரிய உரிமை உள்ளது. இதற்கு நாம் எந்த விதத்திலும் இடையூறு ஏற்படுத்தவில்லை. நினைவேந்தல் நிகழ்வை எவரும் தடுத்து நிறுத்த முடியாது.”

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

“தடை செய்யப்பட்ட தமது பிள்ளைகளை, உறவுகளை அவர்களின் சொந்தங்கள் நினைகூரும்போது அவர்கள் பயங்கரவாதிகளை நினைவுகூருகின்றனர் எனக் காட்ட முற்படவும் கூடாது.” - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

“எனினும், விடுதலைப் புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்ட அமைப்பாகும். அந்த அமைப்பின் இலட்சினை, படங்களைப் பயன்படுத்தி மாவீரர் தின நிகழ்வை நடத்த இடமளிக்க முடியாது.” - என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேலும் கூறினார்.

## ஈ.பி.டி.பியில் இருந்து வெளியேறிய திலீபன்



(கி.வசந்தன்)

முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாகச் செயலாளருமான குலசிங்கம் திலீபன் கட்சியில் இருந்தும் அதன் அனைத்துப் பொறுப்புக்களில் 02 ▶

## கொட்டும் மழைக்கு மத்தியிலும் A/L பரீட்சை எழுதும் மாணவர்கள்



(கி.வசந்தன்)

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நாடாளாவிய ரீதியில் இன்று ஆரம்பமாகியுள்ளது.

வடக்கு, கிழக்கில் வவுனியா இன்று கடும் மழை பெய்து வருவதால் மழைக்கு மத்தியில் மாணவர்கள் பரீட்சை எழுதச் சென்றனர்.

இந்தக் கடும் மழையால் பரீட்சை எழுதும் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.



# ராமயன்குளம் உடைப்பெடுக்கும் அபாயம்

## முற்பாதுகாப்பு நடவடிக்கையில் விவசாயிகள்

(கி.வசந்தன்)

வவுனியா, செட்டிகுளம் பிரதேசத்தில் அமைந்துள்ள ராமயன்குளம் உடைப்பெடுக்கும் அபாயம் காணப்படுவதாகக் கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து அப்பகுதி கமநல சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய விவசாயிகள் உடனடியாக அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

100 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலத்தை கொண்ட ராமயன்குளம் அதிகளவான மழை வீழ்ச்சி காரணமாக உடைப்பெடுக்கும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது.

எனவே, இந்தப் பேரிடரைத் தடுக்கும் முகமாக விவசாயிகளால் மண் மூடைகள் அடுக்கி முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



### வடக்கு ஆளுநர் தலைமையில்

## மன்னார் மாவட்ட செயலகத்தில் புதன்கிழமை நடமாடும் சேவை

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையிலான குழுவின் நடமாடும் சேவை மன்னார் மாவட்ட செயலகத்தில் நாளைமறுதினம் புதன்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

மன்னார் மாவட்ட பொதுமக்கள் இதில் கலந்துகொண்டு தமது சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலநிலை மோசமடைந்தால் நடமாடும் சேவை பிறிதொரு தினத்துக்கு ஒத்தி வைக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## வடக்கு விவசாய, மீன்பிடி அமைச்சின் செயலாளராக சிறி நியமனம்

### இடைநிறுத்தப்பட்ட ஜெகூ பேரவையின் செயலாளரானார்

வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளராக ஆ.சிறி, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனத்தால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றா–டல் அமைச்சின் செயலாளராக நேற்று முன்தினம் வரை பதவி வகித்த ம.ஜெகூ, வடக்கு மாகாண பேரவையின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**ஈ.பி.டி.பியில் இருந்து...**

இருந்தும் வெளியேறுவதாக இன்று அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சியில் ஆரம்பித்த எனது அரசியல் பயணம், பின்பு 2013 ஆம் ஆண்டிலிருந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) உடன் இணைந்து கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாகச் செயலாளராகப் பொறுப்பேற்று மக்கள் பணியாற்றினேன். மேலும், 2020 இல் நடைபெற்ற தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் தெரிவாகினேன்.

தற்போது நடைபெற்ற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட எனக்குக் கணிசமான வாக்குகளே கிடைக்கப் பெற்றன. இதுவரை, காலமும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியில் பயணித்து மக்கள் சேவையாற்றினேன்.

சில விடயங்கள் காரணமாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியில் இருந்து விலகுகின்றேன். இது தொடர்பான கடிதத்தை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பியுள்ளேன்.

இந்தக் கட்சியில் இருந்து நான் வெளியேறுவதற்குக் கட்சியோ அல்லது கட்சியின் தலைமையோ காரணம் இல்லை. இது எனது தனிப்பட்ட முடிவு என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.” – என்றுள்ளது.





# வவுனியாவில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு

**(கி.வசந்தன்)**

வவுனியாவில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஒழுங்கமைப்பில் வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

முன்னதாக நகர சபை வாயிலில் அமைந்துள்ள பொங்கு தமிழ் நினைவு தூபிக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், மாவீரர்களின் நினைவு சார்ந்த திருவுருவப் படம் அங்கிருந்து மேள, தாள வாத்திய இசையுடன் எடுத்து வரப்பட்டு நகர சபை கலாசார மண்டபத்தில் வைக்கப்பட்டது.

பிரதான ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, மாவீரர்களுக்கான அகவணக்கத்தைத் தொடர்ந்து அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கும், மாவீரர்களின் நினைவு சார்ந்த பொதுப் படத்துக்கும் மலர் தூபி, மாலை அணிவித்து தீபமேற்றி மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது மாவீரர்களின் பெற்றோர்களின் கண்ணீராலும், கதறலாலும் மண்டபமே சோகமானது.

தொடர்ந்து, நினைவு உரைகள், நடன நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டு, மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பெருமளவான மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவுகள் கலந்து கொண்டனர்.



















# யாழ்ப்பாணம் நீர்வேலி பகுதியில் கிணற்றில் ஆணின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், நீர்வேலிப் பகுதியில் கிணற்றில் இருந்து ஆணொருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று (24) இடம்பெற்றுள்ளது.

இதன்போது, நீர்வேலி வடக்கு, நீர்வேலி பகுதியைச் சேர்ந்த சோதிலிங்கம் மிதுர்சன் (வயது 28) என்ற இளைஞனே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

இந்த இளைஞனைக் காணவில்லை என உறவினர்கள் தேடியவேளை அவரது சடலம் கிணற்றில் காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டுள்ளார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



# வட்டவளைப் பொலிஸ் பிரிவில் இரண்டு பஸ்கள் மோதி விபத்து!

வட்டவளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஹட்டனிலிருந்து கண்டி நோக்கி சென்ற அரச பஸ்ஸும் கொழும்பிலிருந்து ஹட்டன் நோக்கி சென்ற தனியார் பஸ்சும் விபத்துக்குள்ளாகின.

ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை கரோலினா தோட்ட பகுதியில் இன்று (25) காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் நால்வருக்கு காயம் ஏற்பட்டுள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று வட்டவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹட்டனில் இருந்து கண்டி நோக்கி அதிவேகமாகச் சென்ற தனியார் பஸ் அரச பஸ் எதிர்திசையில் வருவதை கண்டு பிரேக் அழுத்தியதில் தனியார் பஸ்ஸின் பின்பகுதி நழுவி அரச பஸ் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், தனியார் பஸ்ஸின் பின்புறம் இரண்டாகப் பிரிந்துள்ளதாக விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் வட்டவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வட்டவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# வெள்ளத்தில் மூழ்கிய வட்டுவாகல் பாலம்!

## கடற்படையினர் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில்

(பாலநாதன் சதீசன்)

முல்லைத்தீவு, பரந்தன் ஏ - 35 வீதியில் உள்ள வட்டுவாகல் பாலத்தை மூடி மழை வெள்ளநீர் பாய்வதால் போக்குவரத்தில் பெரும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.

மக்கள் பெரும் சிரமத்தை எதிர் கொண்டுள்ளனர். விபத்து ஏற்படும் சாத்தியங்கள் அதிகளவாக இருப்பதால் பாலத்தின் இருமருங்கிலும் பொலிஸார் மற்றும் கடற்படையினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கன மழை தொடர்ச்சியாகப் பெய்து வருகின்றது. இதனால் நந்திக்கடல் நீர் மட்டம் நிரம்பியுள்ளது. இதனால் வட்டுவாகல் பாலத்தின் நீர்மட்டம் உயர்ந்து பாலத்தை மூடி நீர் பாய்ந் தோடாமல் தேங்கியுள்ளது.

அத்தோடு பாலத்தின் அணைக் கட்டுகளும் மூடப்பட்டுள்ளன. பாலத்தின் பல இடங்களில் உடைவுகள் ஏற்பட்டுச் சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

இதனால் வீதி எது கடல் எது என்று தெரியாத நிலையிலேயே பயணிகள் பயணம் செய்ய வேண்டிய துர்பக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் வட்டுவவாகல் பாலத்தின் இரு கரையிலும் பொலிஸார், கடற்படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் பாலத்தின் இரு கரையையும் அடையாளப்படுத்தும் நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

1950 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டப்பட்டதாக கூறப்படும் வட்டுவாகல் பாலம் கிட்டதட்ட 440 மீற்றர் நீளம் கொண்டதாக காணப்படுகின்றது. முல்லைத்தீவு, பரந்தன் ஏ - 35 வீதியில் அமைந்துள்ளது. வட்டுவாகல் பாலம் கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்னரான யுத்தம், 2004 ஆம் ஆண்டுக்கான ஆழிப்பேரலை அனர்த்தம் என்பவற்றால் கடுமையாக சேதத்துக்கு உள்ளாகியது.

இருந்தும் சிறு சிறு திருத்தங்கள் இடம்பெற்று இன்றுவரை பாவனையில் இருப்பது குறிப்பிடதக்கது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதிமன்றமே தீர்வு தரும்

தேர்தல் செலவீனத்திற்கான நிதியை வெட்டி முன்னைய ரணில் விக்கிரமசிங்கவின் அரசு நடத்திய அரசியல் திருகுதாளத்தினால் உள்ளூராட்சித் தேர்தல் நடுவழியில் குழம்பி நிற்கின்றது.

வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒரு பகுதி வாக்குச்சீட்டுகளும் அச்சிடப்பட்ட நிலையில், அந்தத் தேர்தல் தடைப்பட்டு போய் சுமார் இரண்டு வருடங்களாக நிலைமை இழுபடுகின்றது. தேர்தலை திட்டமிட்டுக் குழப்பிய ரணில் அரசின் நடவடிக்கைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப் படையில் நிலுவையில் உள்ள அந்தத் தேர் தலைக் கால தாமதம் செய்யாமல் நடத்தி முடிக்குமாறு உயர் நீதிமன்றம் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருக்கின்றது. தேர்தல் ஆணையமும் அத்தேர்தலை நடத்துவதற்கான தயாரிப்புகளைச் செய்து வருகின்றது.

ஆயினும், சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களின் அடிப்படையில் இப்போது தேர்தலை நடத்துவது சரியா என்ற கேள்வி எழுந்திருக்கின்றது. வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் வாக்களிக்கும் உரித்து பெறாத சுமார் 5 லட்சம் பேர் இப் போது வாக்களிக்கும் உரிமையை பெற்றி ருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு வழங்கப் படவில்லை.

அது மாத்திரமல்ல, வேட்பு மனு தாக்கல் செய்த சமயம் ஓரணியில் இருந்த கட்சிகள், கூட்டுக்கள், தரப்புகள் இப்போது இரண்டு வருட அரசியல் மாற்றத்தின் காரணமாக எதிரெதிர் தரப்புகளுக்கு வந்துவிட்டன. எதிரெதிர்தரப்புகளிலிருந்த அரசியல்வாதிகள் ஓரணியில் நிற்கிறார்கள். அவர்களின் நிலைப் பாடுகளுக்கு மாறான கட்டமைப்பில் வேட்பு மனுக்கள் இப்போது உள்ளன.

ஆகவே இரண்டு வருடத்திற்கு முந்திய வேட்பு மனுக்களின் அடிப்படையில் இப்போது உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது பொருத்தமற்றது என்று பலத ரப்புகளும் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆயினும் 2023 முற்பகுதியில் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நிலுவை யில் நிற்கும் தேர்தலை தொடர்ந்து நடத்தி முடிக்கும்படியான உயர்நீதிமன்ற உத்தரவு இருப்பதால் அதன்படி செயல்படவே தேர் தல் ஆணையம் தயாராகி வருகிறது.

ஆனால் பிரதான அரசியல் கட்சிகளும் இப்போதைய அரசின் ஆளுந்தரப்பும் புதிய வேட்பு மனுக்களைக் கோரிப் பெற்று, அவற்றின் அடிப்படையில் இந்தத் தேர்தலை நடத்துவதே பொருத்தமானது என்று கருது கின்றன.

பொதுத் தேர்தலின் பின்னர் கூடிய புதிய அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டத் திலும் இது பற்றி பேசப்பட்டு இருக்கின்றது. பழைய வேட்பு மனுக்களின் அடிப்படையில் தேர்தலை நடத்துவது பொருத்தமற்றது என்ற கருத்து அங்கு பிரதிபலித்துள்ளது.

நாடாளுமன்றுக்கு புதிய சட்டத்தை கொண்டு வந்து, பழைய வேட்பு மனுக்களை நிராகரித்து, புதிய வேட்பு மனுக்களை கோரிப் பெற்று, அவற்றின் அடிப்படையில் இந்தத் தேர்தலை நடத்துவதற்கு புதிய அரசு விரும்புகிறது.

ஆனால், அதனை புதிய அரசால் செய்ய முடியுமா என்று கேள்வி எழுகின்றது. அரசாங்கம் ஒரு சட்டத்தை கொண்டு வந்து, பழைய வேட்பு மனுக்களை சட்ட ரீதியாக நிராகரிக்கும் ஏற்பாட்டைச் செய்வதற்கு குறைந்தபட்சம் மூன்று மாதங்களாவது தேவைப்படும். ஆனால் உயர்நீதிமன்ற உத்தரவுப்படி அதற்கு முன்னர் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டிய கட்டாயத்தில் தேர்தல் ஆணையம் இருக்கின்றது. இந்தத் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் நாடா ளுமன்றத்தில் நடவடிக்கை எடுக்கின்றது என்ற காரணத்தைக் காட்டி தேர்தலை நடத் தாமல் தேர்தல் ஆணையம் காத்திருக்க முடி யாது. ஏற்கனவே தேர்தல் ஆணையத்துக்கு உயர் நீதிமன்றம் காட்டமான உத்தரவு வழங்கியிருக்கின்ற நிலையில் அதன்படி செயல்படுவதை தவிர தேர்தல் ஆணையத் துக்கு வேறு வழி ஏதுமில்லை.

இந்த நிலையில் இந்த விவகாரத்தில் ஒரு தீர்மானம் எடுப்பதாயின் - அதாவது பழைய வேட்பு மனுக்களை ஒதுக்கி வைத்துவிட்டு, புதிய வேட்பு மனுக்களைக் கோரிப் பெற்று, அவற்றின் அடிப்படையில் இந்தத் தேர்தலை நடத்துவதாயின் - அதற்கும் நேரடியாக நீதிமன்றத்திடம் போய் அனுமதி பெறு வதுதான் இப்போதைய நிலையில் சாத்தியமானதும் பொருத்தப்பபடானதுமாக இருக்க முடியும்.

ஆனால் அதை யார் செய்யப் போகிறார்கள் என்ற கேள்விதான் எழுகின்றது. இவ்விட யத்தில் முழு நாட்டுக்கும் நீதி, நியாயம் வேண்டி யாரேனும் ஒரு தரப்பு உயர் நீதிமன்றத்திடம் போவதுதான் விவகாரத்தை சுமுகமாகத் தீர்ப்பதற்கான ஒரே வழியாக இருக்க முடியும்.

பூனைக்கு மணி கட்ட போவது யார்? தெரியவில்லை. பார்த்திருப்போம்.





# கல்முனை, சாய்த்தமருது பிரதேசங்களில் வெள்ள அபாயம்; முகத்துவாரங்கள் திறப்பு

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

கல்முனை மற்றும் சாய்த்தமருது பிரதேசங்களில் வெள்ள அனர்த்தங்களைக் கட்டுப்படுத்துவதற்காக மூன்று கடல் முகத்துவாரங்கள் அவசரமாக திறக்கப்பட்டுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தொடக்கம் பெய்து வரும் தொடர் மழை காரணமாக இந்தப் பிரதேசங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டது.

இதை அடுத்து கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸின் அறிவுறுத்தலின் பேரில் சாய்ந்தமருது, கல்முனை மற்றும் பெரிய நீலாவணை ஆகிய இடங்களில் உள்ள தோணா முனைகளான கடல் முகத்துவாரங்கள் தோண்டப்பட்டு வெள்ள நீரை கடலுக்கு செலுத்துவதற்கான துரித நடவடிக்கை கல்முனை மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டது.



அத்துடன் கல்முனை கிரீன் பீல்ட் பகுதி உள்ளிட்ட சில இடங்களில் காற்றால் முறிந்து வீழ்ந்த மரங்களும் மாநகர சபையால் உடனுக்குடன் வெட்டி அகற்றப்பட்டு போக்குவரத்து தடங்கல்களும் அபாய நிலைமைகளும் நிவர்த்தி செய்யப்பட்டன. அந்தப் பகுதிகள் இயல்பு நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. வடிகான்களில் ஏற்பட்டிருந்த தடைகளும் அகற்றப்பட்டு வெள்ள நீரோட்டம் சீரமைக்கப்பட்டு வருகின்றது.

கல்முனை மாநகர ஆணையாளரின் நேரடிக் கண்காணிப்பில் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌசி, உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் உள்ளிட்ட அதிகாரிகள் களத்தில் நின்று வெள்ள அனர்த்த கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நெறிப்படுத்தி வருகின்றனர்.

வெள்ள அபாய நிலையில் இருந்து மக்களை பாதுகாப்பதற்காக இரவு பகலாக ஓய்வின்றி அர்ப்பணிப்புடன் களப்பணியாற்றி வருகின்ற கல்முனை மாநகர சபை ஊழியர்களுக்கு மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளார்.

# மு.கா.விலிருந்து ஹரீஸ் இடை நிறுத்தம்!



**(எஸ்.அஷ்ரப்கான்)**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடத்தில் இருந்து முன்னாள் எம்.பி. ஹரீஸ் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

கட்சியின் செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பர் இது தொடர்பான கடிதத்தை ஹரீஸ்‘க்கு அனுப்பியுள்ளார்.

கட்சியை, கட்சித் தலைவரை பொது வெளியில் விமர்சித்த காரணத்தால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இந்த செயற்பாடு தொடர்பில் நியாயப் படுத்தும் காரணங்கள் இருப்பின் அதனை விளக்குமாறும் அந்த கடிதத்தில் ஹரீஸிடம் கோரப்பட்டுள்ளது.





# இலங்கை ஊடாக வெளிநாட்டுக்கு செல்ல முயன்ற இந்திய யுவதி கைது!

இலங்கை ஊடாக வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முயன்ற இந்திய யுவதி உட்பட மூவர் நேற்றுக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட யுவதி குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் வசிக்கும் 24 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

இந்தியன் ஏர்லைன்ஸின் ஏஐ-231 விமானத்தில் மும்பையிலிருந்து நேற்று பிற்பகல் 03 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அந்தப் பெண் இலங்கைக்குள் நுழைவதற்கான வீசாவை பெற்று, தனது இந்திய கடவுச்சீட்டு மற்றும் பிற ஆவணங்களை அனுமதிக்காக குடிவரவு அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார்.

சோதனையின் போது பெண்ணின் கடவுச்சீட்டு, சர்வதேச பொலிஸாரின் தொலைந்து போன மற்றும் திருடப்பட்ட தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேற்கொண்ட விசாரணையின் போது போலியான முறையில் கடவுச்சீட்டு தயாரிக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

அதற்கமைய குறித்த யுவதி மற்றும் அவருடன் பயணித்த மேலும் இரண்டு இந்தியர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த மூன்று பேரும் உடனடியாக இந்தியாவுக்கு மீண்டும் நாடு கடத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். பல்கலைக்கழகத்தில் பள்ளிவாசல் திறந்து வைப்பு

(பரீட் இக்பால்)







# அனர்த்தங்களைக் கட்டுப்படுத்த கல்முனை மாநகர விசேட குழு!

## அவசர தொலைபேசி இலக்கங்களும் அறிமுகம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காலநிலை சீர்கேடு காரணமாக ஏற்பட வுள்ள அபாய நிலைமை தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள சிவப்பு எச்சரிக்கையைக் கருத்தில் கொண்டு கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் அனர்த்தங்களை கட்டுப்படுத்துவதற்கும் பொது மக்களை பாதுகாப்பதற்கும் மீட்புப் பணிகளை முன்னெடுப்பதற்காகவும் விஷேட அனர்த்த முகாமைத்துவ குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ்ஸின் நேரடிக் கண்காணிப்பில் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌசி தலைமையில் இந்தக் குழு செயற்பட வுள்ளது.

இதன் கீழ் கல்முனை மாநகர சபை பிரதேசங்கள் இரு வலயங்களாகப் பிரிக்கப்பட்டுப் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களை உள்ளடக்கிய வலயத்தில் காண்காணிப்பு மற்றும் இணைப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக மாநகர சபையின் கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் செயற்படுவதுடன் அபி விருத்தி உத்தியோகத்தர் டிலிப் நௌஷாத் மேற்பார்வையில் மாநகர சபையின் களப்பணியாளர்கள் அனர்த்த கட்டுப்பாடு மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

அவ்வாறே மருதமுனை, பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை மற்றும் மணற்சேனை பிரதேசங்கள் உள்ளடக்கிய வலயத்தில் காண்காணிப்பு மற்றும் இணைப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ். எம். அஸீம் செயற்படுவதுடன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.எம். பயாஸ் மேற்பார்வையில் களப்பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம் அனைத்து பிரதேசங்களுக்கும் பொதுவான கண்காணிப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் அறிவுறுத்தலின் பேரில் தற்போதைய பேரிடர் நிலைமையைக் கருத்தில் கொண்டு மாநகர சபையின் அனைத்து ஊழியர்களதும் விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அனர்த்தங்கள் எவையும் நிகழுமாயின் பொது மக்கள் பின்வரும் கைத்தொலைபேசி இலக்கங்களில் தமது பிரதேசத்துக்குப் பொருத்தமான இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி தகவல்களை தெரிவிக்க முடியும்.

ஏ.ஜே.ஏ.எச்.ஜௌசி – பொறியியலாளர் – 0776707257, ஏ.எஸ்.எம். அஸீம் – உதவி ஆணையாளர் -0767210343, வை.ஹபீபுல்லாஹ் – கணக்காளர் -0766805545, டிலிப் நௌஷாத் -0771865752, எம்.எம். எம்.பயாஸ் – 0754286800.

அனர்த்தங்கள் தொடர்பில் கல்முனை மாநகர சபையினால் முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொது மக்கள் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கி உதவுமாறு மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

# அனர்த்த கால அவசர நிலைமையில் பரீட்சார்த்திகளுக்கு இலவச போக்குவரத்து

## ரிசாத் அன்ட் பிரதர்ஸ் அமைப்பு நடவடிக்கை

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

அனர்த்த நிலைமை ஏற்படும் பட்சத்தில் சம்மாந்துறை பிரதேசத்தில் உள்ள பரீட்சார்த்திகளுக்கு இலவச போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுக்க ரிசாத் அன்ட் பிரதர்ஸ் அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போதைய காலநிலை மாற்றம் காரணமாக புயல் காற்று, பலத்த மழை காரணமாக, கல்விப் பொது தராதர உயர்தர பரீட்சைக்கு அடை மழை, வெள்ளப்பெருக்கு அனர்த்தம் காரணமாக பரீட்சை நிலையங்களுக்கு செல்ல போக்குவரத்து வசதிகள் இன்றி சிரமப்படும் மாணவர்களுக்கு இலவசமாக விஷேட போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இந்த அமைப்பு தயார் நிலையில் உள்ளது.

இந்த விடயம் வசதியற்ற மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அவசர நிலைமையில் இவ்வாறான போக்குவரத்து வசதிகள் தேவைப்படுவோர் 0728015592 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மறு அறிவித்தல்வரை மீனவர் கடலுக்கு செல்ல வேண்டாம்

## மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப் பணிப்பாளர்



(பாறுக் ஷிஹான்)

மீனவர்கள் மறுஅறிவித்தல் வரும் வரை கடலுக்கு செல்ல வேண்டாம் எனவும் தேவையற்ற வதந்திகளை நம்பி ஏமாறாமல் விழிப்புடன் இருக்குமாறும் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ் தெரிவித்துள்ளார்.

சூறாவளி ஒன்று உருவாகும் பட்சத்தில் மக்களுக்கு அது தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஊடாக உடனடியாக அறிவிக்கப்படும்.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக அதிக மழைவீழ்ச்சி கிடைக்கக் கூடிய வாய்ப்பு காணப்படுகிறது.

அனைவரும் வெள்ள அனர்த்தத்துக்கு உரிய முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெள்ள நிவாரண உதவிகள்!

## கல்லுண்டாய் மக்களுக்கு வழங்கப்பட்டன

கடும் மழை அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட யாழ்ப்பாணம், கல்லுண்டாய் மக்களுக்கு யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஜே – 135, ஜே – 136 கிராம சேவை யாளர் பிரிவுகளில் 59 குடும்பங்களுக்கு 2 லட்சத்து 95 ஆயிரம் ரூபா பெறு மதியான அத்தியவசியமான உணவுப் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன.



அத்துடன் கல்லுண்டாய் பகுதியை சேர்ந்த கொட்டடி நமச்சிவாய வித்தி யாலயத்தில் கல்வி கற்கும் தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவனுக்கு 45 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் ஒன்றும் வழங்கப்பட்டது.

கல்லுண்டாய் ஐக்கிய சனசமூக நிலைய தலைவர் க.செந்தூரன் தலைமையில் நேற்று முன்தினம் சனிக் கிழமை இடம்பெற்ற இந்த உதவி கள் வழங்கும் நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன தாஸ் சுவாமிகள் உதவிகளை வழங்கி வைத்தார்.

இதில் சந்நிதியான் ஆச்சிரம தொண் டர்களும் கலந்துகொண்டனர்.









# சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் பொதுச் செயலாளர் மன்சூர் காலமானார்!



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் பொதுச் செயலாளரும் ஓய்வு பெற்ற உதவி அதிபருமான ஐ.எல்.எம்.மன்சூர் நேற்று ஞாயிற்றுக்கிழமை (24) கால மானார்.

இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தையான அன்னாரின் சடலம் மாளிகைக்காடு மஸ்ஜிதுல் ஸாலிஹீன் ஜும்ஆப் பள்ளிவாசல் அருகாமையில் உள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டு பின்னர் மாளிகைக்காடு மஸ்ஜிதுல் ஸாலிஹீன் ஜும்ஆப் பள்ளிவாச லில் ஜனாஸா தொழுகை நடத்தப்பட் டது.

பெருந்திரளானோரின் பங்குபற்ற லுடன் நேற்று அதிகாலை மாளிகைக் காடு அந்நூர் ஜும்ஆப் பள்ளி மைய வாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# அம்பாறையில் அனர்த்தநிலை முன்னேற்பாடு தொடர்பில் ஆராய்வு!

## நாடாளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவா நடவடிக்கை

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அம்பாறை மாவட்டத்தில், சீரற்ற காலநிலை காரணமாக பொது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா நேற்று முன்தினம் பணிப்புரை விடுத்தார்.

அனர்த்தம் ஏற்படக்கூடிய இடங்களை நேரில் சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், கரையோரத்தில் வாழும் மக்கள் மற்றும் மீனவர்களைச் சந்தித்து உரையாடினார்.

மழை, வெள்ளம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக, மக்கள் பாதிப்புகளை எதிர்நோக்குமிடத்து அவற்றில் இருந்து பொது மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. றியாஸைத் தொடர்பு கொண்டு கலந்துரையாடினார்.

தற்போதைய நிலமைகள் தொடர்பாக கேட்டறிந்ததுடன் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச மக்களுக்கும் உரிய பாதுகாப்புகள் வழங்கும் பொருட்டு மாவட்ட அனர்த்த முகாமைத்துவநிலையம்முன்னெடுத்துவரும் நடிவடிக்கைகள் குறித்து பாராட்டுகளையும் தெரிவித்தார்.



கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் மழை காரணமாக வெள்ள நிலை ஏற்படாதவாறு பிரதேச மக்களை பாதுகாக்கும் பொருட்டு அனர்த்த முன்னேற்பாடுகளைச் செய்யுமாறு கல்முனை மாநகர ஆணையாளர் என். எம். நௌபீஸ் மற்றும் அனர்த்த முன்னேற்பாடுகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள கணக்காளர் வை. ஹபீபுள்ளாஹ் அத்துடன் மாநகர பொறியியலாளர் ஏ.ஜே.எம்.ஜெளஸி ஆகியோரைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்கள் நேரில் வந்து நிலமைகளைப் பார்வையிட்டனர்.



# வலுப்பெறுகிறது காற்றழுத்த தாழ்வு பகுதி: தமிழகத்தில் 29 ஆம் திகதி வரை கனமழை

வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி வலுப்பெற்று வருவதால், தமிழகத்தில் சில மாவட்டங்களில் இன்று முதல் 29 ஆம் திகதி வரை கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, பூமத்திய ரேகையை ஒட்டிய கிழக்கு இந்திய பெருங்கடல் பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்று நிலவுகிறது. இது மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து, இன்று தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும்.

இது அதற்கடுத்த 2 நாள்களில் வடமேற்கு திசையில் தமிழகம், இலங்கை கடற்கரையை நோக்கி நகரக்கூடும். இதன் காரணமாக இன்று கடலோர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், உள் தமிழகத்தில் சில இடங்களிலும் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இன்று தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய டெல்டா மாவட்டங்கள், காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், கடலூர், விழுப்புரம், அரியலூர், சிவகங்கை, புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்கள், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளது.

நாளை டெல்டா மாவட்டங்கள், கடலூர், புதுக்கோட்டை மாவட்டங்கள், காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், அரியலூர், பெரம்பலூர், திருச்சி, கள்ளக்குறிச்சி, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்கள், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

எதிர்வரும் 27ஆம் திகதி விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், திருவள்ளூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, சென்னை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளது. வரும் 28-ம் தேதி சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், டெல்டா மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், 29-ம் தேதி சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களிலும் கனமழை பெய்யக்கூடும்.



சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில் இடி, மின்னலுடன் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் நாலுமுக்கு, ஊத்து, நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறில் 2 சென்றி மீற்றர் மழை பதிவாகியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



# சுமையாக இருக்கக் கூடாது என்றே ரஹ்மானைப் பிரிகிறார் சாயிரா பானு

ரஹ்மானுக்கு சுமையாக இருக்கக் கூடாது என்றே அவரை பிரிகிறேன் என்று சாயிரா பானு தெரிவித்துள்ளார்.

ஏ.ஆர்.ரஹ்மானை பிரிந்தது குறித்து அவரது மனைவி சாய்ரா பானு முதன் முறையாக விளக்கம் அளித் துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்,

“எனக்குக் கடந்த 2 மாதங்களாக உடல்நிலை சரியில்லை. அதன் காரணத்தினால், நான் இப்போது சென்னையில் இல்லை.

இதனாலேயே ஏ.ஆர்.ரகுமானிடம் இருந்து கொஞ்சக் காலம் நான் பிரேக் எடுத்துக் கொள்ள விரும்பினேன். ஏ. ஆர். ரகுமான் மீது தயவு செய்து யாரும் அவதூறு பரப்பாதீர்கள். அவர் போன்ற அற்புதமான ஒரு மனிதரைப் பார்க்க முடியாது. எனவே அவர் மீதான அனைத்து பொய்யான குற்றச்சாட்டுகளையும் நிறுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

என் உடல்நிலை காரணமாகத்தான் இந்த பிரிவு. .ஆர்.ரகுமானின் பிசியான இந்த நேரத்தில் அவரை தொந்தரவு செய்ய விரும்பவில்லை. என் குழந்தைகளையும் நான் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. அவர் மீது நான் வைத்த நம்பிக்கை என் வாழ்வை விட பெரியது.

நான் அவரை அந்த அளவுக்கு நேசிக்கிறேன். சிகிச்சை முடிந்தவுடன் விரைவில் நான் சென்னை திரும்புவேன். அவர் பெயருக்குத் தயவு செய்து யாரும் களங்கம் ஏற்படுத்தாதீர்கள். அவர் மிகச்சிறந்த மனிதர்.”- என்று குறிப்பிட்டுள்ளார்.



# பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் முடக்கப்பட்டுள்ள இஸ்லாமாபாத்

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் முடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் அந்த நாட்டு முன்னாள் பிரதமர் இம்ரான் கானை விடுவிக்கக் கோரி நாடு தழுவிய ரீதியில் பல்வேறு வகையில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

போராட்டங்களின் ஒரு பகுதியாக இம்ரான்கானின் ஆதரவாளர்களால் இஸ்லாமாபாத்தில் பேரணியொன்று முன்னெடுக்கப்பட இருந்தது.

இந்தப் பேரணியைத் தடுக்கும் வகையில் இஸ்லாமாபாத் நகர் முடக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்புக் காரணங்களுக்காக பல்வேறு இடங்களில் கையடக்கத் தொலைபேசி மற்றும் இணையத்தள சேவைகள் முடக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதனிடையே, இஸ்லாமாபாத்தில் காவல்துறையினர் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# உலக வரலாற்றில் பெரும் பணக்காரரானார் இலான் மஸ்க்

அமெரிக்க தேர்தலுக்கு பின்னர் இலான் மஸ்க்கின் சொத்து மதிப்பு 29 இலட்சம் கோடியைக் கடந்துள்ளதாக போர்ப்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் அவர் உலக வரலாற்றிலேயே பெரும் பணக்காரர் என்கிற பெருமையைப் பெற்றுள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

டெஸ்லா, ஸ்பேக்ஸ் எக்ஸ், மற்றும் எக்ஸ் ஆகிய நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரியான இலான் மஸ்க் ஏற்கனவே உலகின் பெரும் பணக்காரர்களில் ஒருவராகக் காணப்படுகிறார்.



இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுக்குப் பிறகு அவரது சொத்து மதிப்பு இன்னும் உயர்ந்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்பிற்கு ஆதரவாகப் பிரசாரம் செய்து வந்த இலான் மஸ்க், ட்ரம்பின் பிரசாரத்துக்குப் பல ஆயிரம் கோடி நிதியையும் வழங்கினார்.

இதன் மூலம் அவர் ட்ரம்பிற்கு மிகவும் நெருக்கமான நபராக மாறினார். தேர்தலில் வெற்றி பெற்ற ட்ரம்ப் தனது தலைமையில் அமைய இருக்கும் புதிய அரசில் எலான் மஸ்குக்கு முக்கிய பொறுப்பை வழங்கியுள்ளார்.

இதன் காரணமாக இலான் மஸ்க்கின் நிறுவனங்களின் பங்குகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்து வருகின்றன. இதனால் அவரது சொத்து மதிப்பு உயர்ந்து கொண்டே வருகிறது.

தேர்தல் முடிவுகள் வெளியான நாளில் மட்டும் இலான் மஸ்க்கின் சொத்து 2.19 லட்சம் கோடி ரூபா உயர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பிரித்தானியாவில் 400 இடங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுப்பு

பெர்ட் புயல் பிரித்தானியாவை தாக்கியுள்ள நிலையில் பல்வேறு பகுதிகளில் வீடுகள் மற்றும் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், பிரித்தானியா முழுவதும் 400 இடங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், ஸ்கொட்லாந்து, வேல்ஸின் மேற்கு பகுதிகள், தென்கிழக்கு பிரித்தானியா மற்றும் வடக்கு அயர்லாந்தில் பலத்த காற்றுடனான மழைவீழ்ச்சி பதிவாகக் கூடுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

பலத்த காற்று வீசுவதன் காரணமாக பல்வேறு பகுதிகளில் போக்குவரத்து சேவைகளுக்கு இடையூறு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதாக அந்த நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

புயல் காரணமாக பல்வேறு பகுதிகளுக்கான மின் விநியோகம் தடைப்பட்டுள்ளதுடன் பிரித்தானியா முழுவதும் 26 ஆயிரம் கட்டிடங்களுக்கு மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பக்கங்கள் 03

கனடா முரசு

திங்கட்கிழமை 25/11/2024

## கனடாவில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சிறுவன் பலி

கனடாவில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

கனடாவின் வின்னிபெக் வடக்கு மானிடோபா

02



# கனடிய மக்களுக்கு அரசாங்கம் அனுப்பி வைக்கும் காசோலை

**கனடாவின் மத்திய அரசாங்கம் நாட்டு நாட்டின் அதிகளவான மக்களுக்கு காசோலைகளை அனுப்பி வைக்க உள்ளது.**

**குறிப்பாக கடந்த ஆண்டில் 150000 டொலர்கள் அல்லது அதற்கும் குறைந்த தொகையை வருமானமாக ஈட்டியவர்களுக்கு இவ்வாறு காசோலைகள் அனுப்பி வைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

**சுமார் 250 டொலர் பெறுமதியான காசோலைகள் அனுப்பி வைக்கப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.**

கொடுப்பனவாக இந்தத் தொகை அனுப்பி வைக்கப்பட உள்ளது அடுத்த ஆண்டு இந்த காசோலைகள் அனுப்பி வைக்கப்பட உள்ளன.

மக்களின் பொருளாதார பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்கும் நோக்கில் ஏற்கனவே அரசாங்கம் சில சலுகைகளை அறிவித்துள்ளது.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான அரசாங்கம் இந்த பண்டிகை காலத்தில் வரி சலுகைகளை வழங்குவதாக அறிவித்துள்ளது.

பல்வேறு பொருள்களுக்கு இவ்வாறு வரிச்சலுகை வழங்கப்பட உள்ளது. இவ்வாறான ஓர் பின்னணியில் காசோலைகளை கனடிய அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# கனடாவின் கல்கரியில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் 4 பேர் காயம்

கனடாவின் கல்கரியில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்தவர்களில் இரண்டு தீயணைப்புப் படைவீரர்களும் உள்ளடங்குகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

கல்கரியின் தென்கிழக்கு பகுதியில் இந்த தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

சில வீடுகள் தீப்பற்றிக்கொண்டதாக தீயணைப்புப் படையினருக்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

தீ விபத்தின் போது ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் இரண்டு பொதுமக்களும் இரண்டு தீயணைப்புப் படைவீரர்களும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.



# பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் கனடா மக்கள்

கனடா தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகிறது. பணவீக்கம், வேலை வாய்ப்பு ஆகியவற்றில் கனடா மக்கள் மோசமான நெருக்கடியை எதிர் கொள்கின்றனர். பொருளாதார நெருக் கடியால் மளிகை பொருள்களின் விலை பாரி யளவில் உயர்ந்துள்ளது.

நடுத்தர வருவாய் உள்ள மக்கள் குடும்பம் நடத்தவே முடியாமல் சிரமப் படுகின்றனர். உணவு வங்கிகளிலும் பற்றாக்குறை நிலவுகிறது.

இந்த சூழலில், அங்குள்ள மக்க ளிடம் சர்வதேச தொண்டு நிறுவன மான சால்வேஷன் ஆர்மி ஆய்வு நடத்தி அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த ஆய்வறிக்கையில், 25 சதவீத கனடா பெற்றோர் தங்கள் குழந்தைக ளுக்கு போதுமான உணவளிப்பதற்காக தங்கள் உணவைக் குறைக்க வேண் டிய கட்டாயத்தில் உள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணக்கெடுக்கப்பட்டவர்களில் 90 சதவீதத்துக்கும் அதிகமானோர் மற்ற தேவைகளுக்காக உணவுப் பொருள் களுக்கான செலவைக் குறைத்துள்ள னர் என கூறியுள்ளனர்.

விலைவாசியை குறைப்பதற்காக சில அத்தியாவசிய பொருள்களுக்கான வரியை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நிறுத்தி வைப்பார் என எதிர்பார்க் கப்படும் சமயத்தில் இந்த ஆய்வ றிக்கை வெளியாகியிருக்கிறது.






# தீயணைப்புப் படையினருக்கு விசேட சலுகை வழங்கப்படும்

ஒன்றாரியோ மாகாணத்தில் தீயணைப்புப் படையினருக்கு விசேட சலுகை வழங்கப்பட உள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

தொழில் இடத்தில் பாதுகாப்பு மற்றும் காப்புறுதி நலன் என்பன வற்றை அதிகளவில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தீயணைப்புப் படையினர் பல்வேறு தியாகங்களை செய்கின்றனர் எனவும் அவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களை விடவும் தீய ணைப்பு படையினர் அதிகளவில் புற்று நோய்களினால் மரணிக்கின் றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே தீயணைப்புப் படையின ருக்கு புற்று நோய்களுக்கான சுகாதார காப்பீடுகள் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என ஒன்றாரியோ மாகாண அரசாங்கம் வலியுறுத்தி யுள்ளது.

இதன் அடிப்படையில் தீயணைப்புப் படையினருக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் இந்த துப்பாக்கிச் சூட்டு சம் பவம் இடம்பெற்றுள்ளது.

ஆயுதத்துடன் இருந்த சிறுவனே, பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரி ழந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த 17 வயது சிறுவன் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயரிழந்துள்ளான்.

கூரிய ஆயுதமொன்றுடன் மக்களுக்கு தீங்கிழைக்கும் வகையில் செயற்பட்ட சிறுவனை சுட்டதாக பொலிஸார் தெரி விக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.






# பாரிய நட்டத்தை எதிர்நோக்கும் கனடிய தபால் திணைக்களம்

கனடிய தபால் திணைக்களம் பாரியளவு நட்டத்தை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் தபால் திணைக்களப் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டமொன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன் காரணமாக போட்டி நிறுவனங்களிடம் சேவை பெற்றுக்கொள்ள மக்கள் உந்தப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது சுமார் 8 மில்லியன் பொதிகள் வேறும் சேவைகள் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.


இதனால் கனடிய தபால் திணைக்களம் பாரியளவு நட்டத்தை எதிர்நோக்க நேரிடலாம் என சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

தொழிற்சங்கப் போராட்டம் இன்னமும் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






புத்தக அறிமுகம்

ராஜ் ராஜரட்ணத்தின்
சமனற்ற நீதி
அமெரிக்க நீதித்துறையின் சதியும் எனது போராட்டமும்

தலைமை: ரமணன்

உரைகள்: அரசி நீரா சொர்ணலிங்கம் லெனின்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!!

வாழும் தமிழ் புத்தகக் கண்காட்சியும் நடைபெறும்

| காலம் | நேரம் | இடம் |
|---|---|---|
| நவம்பர் 30, 2024<br>சனிக்கிழமை | மாலை 4:30<br>முதல் 7:30 வரை | Scarborough Village CRC<br>3600 Kingston Rd<br>(@ Markham) |

தொடர்புகளுக்கு: காலம் 416 731 1752 அல்லது kalam@tamilbook.com